# கலென்பிந்துனுவெவ பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 19 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 18 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 15 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கலெலன்பிந்துனுவெவ பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி | | |
|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் விடுபாடுகள் | 04 | - | - | 2,052 |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 03 | 742 | - | - |
| | -மேற்படி- | 01 | - | 34 | - |
| (இ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 05 | 722 | - | - |
| | -மேற்படி- | 01 | - | 529 | - |
| (ஈ) | நிதிக்கூற்றுகளில் முறையற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | 837 | - | - |
| | -மேற்படி- | 01 | - | 18 | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 47,507,620 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,409,467 ஆக இருந்தது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இலங்கை வங்கியின் கணக்கு இல. 6009033 மற்றும் மக்கள் வங்கியின் கணக்கு இல. 0000107 ஆம் நடைமுறைக் கணக்குகளுக்குரிய காசேடுகளின் மீதிகள் மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளிற்கிடையே முறையே ரூபா 23,046 மற்றும் ரூபா 97,053 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும் அவ் வேறுபாடுகளுக்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 45,162,911 கூட்டுத்தொகையான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 03 வருடத்திற்கு அதிக காலமாக ஐந்தொகையில் அறவிடக்கூடிய பயன்பாட்டுச் சேவைகளின் கீழ் நானாவித பெறுவனவுகளாக ரூபா 740,903 தொகை முன்கொண்டு வரப்பட்ட போதிலும் அதனை இனங்கண்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 795,863 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45,962 ஆக இருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,901,271 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 309,037 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,107 | 1,465 | 2,200 |
| (ii) | வுாடகை | 1,838 | 1,051 | 350 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 690 | 844 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 7,895 | 6,279 | 835 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 399,889 ஆகும்.

#### 2.2.3 கடை வாடகை

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய என்சீபீ/பீஎல்/4/7/19 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவையாவது மீள் மதிப்பீடு செய்யப்பட்டு திருத்தப்பட்ட வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும் அது கருத்திற் கொள்ளப்படாது சபைக்குச் சொந்தமான 38 கடைகள் 07 வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டிருந்தன.

(ஆ) 10 வருடங்களுக்கு முன்பிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 15,850 பெறுமதியான 5 சிவலாகுளம் கடைகளிலிருந்து அறவிட வேண்டிய வாடகையும் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் வாராந்த சந்தை வளவில் காணப்பட்ட 12 கடைகளிலிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 71,312 கூட்டுப்பெறுமதியான வருமானத்தையும் உள்ளடக்கிய ஒரு வருடத்திற்கு மேல் பழமையான ரூபா 243,600 தொகையான நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.4 குழாய்க் கிணறு கட்டணம்**

மீளாய்வாண்டின் போது அறவிட வேண்டிய ரூபா 36,100 தொகை மற்றும் முன்னைய வருடங்களில் நிலுவையாக இருந்த ரூபா 309,300 தொகையான நிலுவைக் குழாய்க் கிணறு கட்டணம் என்பன பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

1987 இன் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் பொது முக்கியத்துவமிக்க விழாக்களை நடாத்துதல் அல்லது சமய, வழிபாடு, கலாசார, சுகாதார, கேளிக்கை அல்லது கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக வருடாந்தம் கூட்டுத்தொகை ரூபா 1,000 இனை விஞ்சுகின்ற செலவினங்களுக்காக அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் ரூபா 76,500 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தன.

**2.4 ஒப்பந்த நிருவாகம்**

**(அ) நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்**

மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை செலவினங்களை மீளளிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் 07 செயற்திட்டங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டு அமுல்படுத்தப்படாமையின் காரணமாக ரூபா 2,100,000 தொகையான மொத்த நிதி ஏற்பாட்டையும் சபை இழந்திருந்தது.

**(ஆ) செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம்**

உலர் வலயத்தில் வசிப்போர்களின் ஜீவனோபாயத்திற்காக உதவியளித்தல் மற்றும் ஒத்துழைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கலன்பிந்துனுவெவ வாராந்த சந்தைக் காணியில் 20 கொட்டகைகள் படி 02 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,329,060 பெறுமதியில் 2011 ஆகஸ்ட் 02 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டம் 2011 நவம்பர் 02 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2012 யூன் 29 ஆந் திகதி வரையும் ரூபா 320,750 பெறுமதியான வேலைப் பகுதிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அது மொத்த வேலைப் பெறுமதியில் 24% ஆன வேலை மாத்திரமாக இருந்தது.

## 2.5 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணங்களுக்காக அனுமதிப் பத்திரம் வழங்கும் செயன்முறை முறையாக அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் பிரதேச வாசிகளின் கோரிக்கையின் அடிப்படையில் மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கல் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அனுமதிப்பத்திர தாரர்களுக்கு இணக்கச் சான்றிதழ் வழங்கும் முன்னேற்றம் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை விஞ்சி 07 ஊழியர்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 702,800 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தன.

(இ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 203 இன் பிரகாரம் களஞ்சிய சொத்துக்கள் மற்றும் ஏனைய பொருட் பதிவேட்டுப் பொருட்கள் தொடர்பாக சரி பிழை பார்ப்பதற்காக 2000 ஆம் ஆண்டின் பின்னர் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத செல்லுபடிக்காலம் கடந்த ரூபா 123,942 பெறுமதியான 53 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமானம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) 2006 இன் 10 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நானாவித வருமான விடயத்தின் கீழ் அறவிடப்பட்ட ரூபா 21,520 தொகையான முத்திரைக் கட்டணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) முன்னோக்கிய வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்